இந்தியத் துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

...

**ஊடக அறிக்கை**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையில் பணியாற்றும் முனைவர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் அவர்கள் இன்று (05.02.2020) இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் அவர்களை சந்தித்து தான் பெற்ற "மொழியியல் விருது" குறித்து அளவளாவினார்.

2. மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் 20.01.2020 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் முனைவர் பேராசிரியர் திருமதி சுபதினி ரமேஷ் அவர்களுக்கு உலகத் தமிழ் சங்க விருதுகள் 2019ன் கீழ் மொழியியல் விருதும் இந்திய ரூபாய் ஒரு இலட்சமும் வழங்கி மதிப்பளித்தமை தெரிந்ததே.

3. முப்பது ஆண்டுகால விரிவுரை அனுபவத்தினைக் கொண்ட பேராசிரியை மொழியியல் விருது பெற்றமைக்காகவும் அவரின் தமிழியல் ஆய்வுப்பணிகளையும் பாராட்டியதுடன் அவரின் மொழியியல் பணிகளை மென்மேலும் சிறப்பாக தொடர வேண்டும் என துணைத் தூதுவர் கேட்டுக்கொண்டார்.

4. குறித்த சந்திப்பு தொடர்பான புகைப்படங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

***

05 பெப்ரவரி 2020
யாழ்ப்பாணம்.